# பரதநாட்டியத்தில் இசை

திருமதி.கிருபாசக்தி கருணா,
முதுகலை மாணவி,
இசைத்துறை,
த.ப.க., தஞ்சாவூர்.

தமிழகம் வளர்த்த ஆடற்கலை கூத்து, தேவரடியார் முறை, தாசி ஆட்டம், சின்னமேளம், சதிர் எனக் கால ஓட்டத்தில் பல்வேறு பெயர்கள் பெற்றுத் தற்காலத்தில் பரதநாட்டியம் என்று அழைக்கப்படுகிறது. இந்தியாவின் செவ்விய ஆடல்களில் ஒன்றாகப் போற்றப்படும் இந்நாட்டியக்கலையை, உலகில் பிறநாடுகளில் உள்ளோரும் விரும்பி முறைப்படி பயின்று உலக அரங்குகளில் ஆடி வருகின்றார்கள். இசையும், தாளமும், மெய்ப்பாடுகளும் இணைந்து வெளிப்படுவது இதன் தனிச்சிறப்பம்சமாகும்.

பரதநாட்டியத்தில் நிருத்தம், நிருத்தியம், நாட்டியம் ஆகிய மூவகை ஆடல்கள் அடங்குகின்றன. நிருத்தம் என்பது அழகிய உடல் அசைவுகளை முதன்மையாகக் கொண்ட தனி ஆடலாகும். அதாவது உணர்ச்சிகளை அபிநயமாக நடித்துக் காட்டாமல் ஒரு தாளத்துக்கும் சொற்கட்டுக்கும் ஏற்ப காலால் ஜதிகளைப் போட்டுக் கொண்டு, கைகளால் பல விசித்திரங்களைச் செய்து காட்டுவதைக் குறிப்பதாகும். 108 கரணங்களும், அதன் விளக்கங்களும் கூடிய தாண்டவம் நிருத்த வகையைச் சேர்ந்தது. அடவுகள், தாளம் ஆகியவற்றை முக்கியமாகக் கொண்ட அலாரிப்பு, ஜதிஸ்வரம், தில்லானா போன்ற உருப்படிகள் இவ்வகைக்குள் அடங்கும்.

நிருத்தியம் என்பது நடனமாகிய நிருத்தமும், அபிநயத்தால் வெளிப்படும் நாட்டியமும் கலந்து விளங்குவதாகும். பரதநாட்டியத்தில் ஆங்கிகம், வாசிகம், ஆகார்யம், சாத்துவிகம் ஆகிய நான்குவகை அபிநயங்கள் பயன்படுத்தப்படுகின்றன. பதவர்ணம், பதம், கீர்த்தனை, விருத்தம் முதலியவை இவ்வகைக்குள் அடங்கும்.

நாட்டியத்திற்கு மிக இன்றியமையாதது இசையாகும். ஆடலில்லாத இசை இருக்கலாம். ஆனால் இசையில்லாத ஆடல் இல்லை. பழந்தமிழகத்தில் மாதவி நல்லாளின் நாட்டிய அரங்கேற்றத்தின்போது,

> "…. யாழும் குழலும் சீருமிடறும்
> தாழ்குழற் றண்ணுமை ஆடலொடிவற்றின்
> இசைந்த பாடல்…." (அரங்கேற்றுகாதை – 26–28)

என யாழும், குழலும், தாளமும் தண்ணுமையும் பாடலொடு இணைந்து ஆடலுக்குச் சிறப்புத் தந்த செய்தியைச் சிலப்பதிகாரம் கூறுகிறது.

உருப்படிகளை நாட்டியத்திற்கு மட்டும் உரிய உருப்படிகள் என்றும், இசை நாட்டியம் இரண்டிற்குமுரிய உருப்படிகள் என்றும் இருவகையாகப் பிரிக்கலாம். இந்த வகையில் நாட்டியத்திற்கே சிறப்பாக உள்ள உருப்படிகளான தொடக்கப்பாடல் (தோடயமங்கலம்), அலாரிப்பு, மல்லாரி, புஷ்பாஞ்சலி, கவுத்துவம், ஐதிஸ்வரம், சப்தம், பதவர்ணம் பற்றியும், 2ம் வகைக்குள் வரும் தில்லானா பற்றியும் இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

பரதநாட்டியத்தில் இடம்பெறும் தோடயமங்கலம், அலாரிப்பு, ஐதிஸ்வரம், சப்தம், பதவர்ணம், பதம், ஜாவளி, தில்லானா, விருத்தம் ஆகிய நிகழ்ச்சிகள் கர்நாடக இசையின் அடிப்படையில் அமைந்தவை. இவற்றுள் அலாரிப்பு, ஐதிஸ்வரம் ஆகிய இரு உருப்படிகளும் நிருத்த வகைக்குரியன. அலாரிப்பு சொற்கட்டுகளுக்கு முதன்மை கொடுத்து அமைகிறது. ஐதிஸ்வரம் சொற்கட்டுக்களுக்கும், சுரக்கோவைகளுக்கும் முதன்மை கொடுத்து அமைகிறது. எனவே இவற்றில் பாடுபொருள் முக்கியம் பெறாது.

இவை தவிர்த்து சப்தம், பதவர்ணம், பதம், ஜாவளி, தில்லானா, விருத்தம் ஆகியவை பாடலை அடிப்படையாகக் கொண்ட நாட்டிய உருப்படிகள். இவற்றுள் ஜாவளி எனும் நாட்டிய உருப்படிக்குரிய பாடல்கள் தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் பாடப்பட்டனவாக இருக்கும். சப்தப் பாடல்களைத் தமிழில் சிலர் இயற்றியிருந்தாலும் பெரும்பாலானவை தெலுங்கு மொழியிலேயே அமைந்துள்ளன.

பதவர்ணம், பதம், தில்லானா, விருத்தம் அல்லது சுலோகம் ஆகிய உருப்படி வகைகளுக்கு தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், மராத்தி, வடமொழி ஆகிய தென்னகத்தில் பயிலும் எல்லா மொழிகளிலும் பாடல்கள் காணப்படுகின்றன.

## தொடக்கப்பாடல்

கலை ஒன்றைக் கற்கவோ, நிகழ்த்தவோ தொடங்கும்போது முதலில் இறைவனைப் போற்றி வணங்குவது பழங்காலத்திலிருந்து வந்த கலைமரபு. நாட்டிய நிகழ்ச்சியிலும் இம்முறை தொன்றுதொட்டுப் பின்பற்றப்பட்டு வருகிறது. நிகழ்ச்சி எவ்விதத் தடையுமில்லாமல் நிறைவாக அமைவதற்கு இத்தெய்வ வணக்கப் பாடல் பாடப்படும்.

பழந்தமிழகத்தில் "தோரிய மடந்தையர்" என்றழைக்கப்பட்ட ஆடி முதிர்ந்த கலைமகளிர் ஆடல் அரங்கில் முதலில் வாரப்பாடல் பாடினர் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

இப்பாடல் வகை தேவபாணி என்றும் அழைக்கப்பட்டது. இது எளிய தாளத்திலும் மங்களகரமான இசையிலும் பாடப்பட்டது. தேவபாணியில் காவற் தெய்வமாகிய திருமாலுக்கே முதலிடம் கொடுக்கப்பட்டது.

சிலப்பதிகார காலத்திற்குப்பின் கோயில்களிலும், அரண்மனைகளிலும், செல்வந்தர் மாளிகைகளிலும் வாழ்ந்த நாட்டியக்கலை கி.பி.பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்திலிருந்து சபையோர் முன்னிலையில் ஆடும் அரங்கக் கலையாக வடிவம் பெற்றது. சின்னையா, பொன்னையா, சிவானந்தம், வடிவேலு ஆகிய நாட்டிய சகோதரர் நால்வரும் மேடைநிகழ்ச்சிக்கேற்ப உருப்படிகளை அமைத்துக் கொடுத்தனர். இப்பாடல்கள் தமிழ், தெலுங்கு, வடமொழி, மராத்தி, இந்தி, கன்னடம் ஆகிய பல மொழிகளில் அமைந்ததுடன், இவற்றிற்குரிய இசைவடிவங்களையும் இயற்றிக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது. இக்காலத்தில் தேவபாணியை நினைவுறுத்தும் வகையில் அமைந்த 'தோடயமங்கலம்' என்ற இசைவடிவம் தோற்றம் பெற்றது.

திருமால் புகழ்பாடும் தாளப்பாக்கம் சின்னையாவின் "ஜய ஜானகிரமண" என்ற தோடயமங்கலம் நாட்டிய அரங்குகளில் மிகப் பிரபல்யம் அடைந்துள்ளது. வடமொழியிலமைந்த இத்தோடயமங்கலம் ஐந்து பகுதிகளைக் கொண்டு இராகமாலிகையாகவும், தாளமாலிகையாகவும் அமைந்துள்ளது. தஞ்சாவூர் சுவாமிநாதனார் இயற்றப்பட்ட நாட்டை இராகத்திலும், கண்டசாபு தாளத்திலும் அமைந்த

"ஜய சுத்த புரிவாசா
ஜய மகா ஞானசபேசா"

எனத் தொடங்கும் தோடயமங்கலத்தில் சிவன், திருமால், அம்பாள், தேவர்கள் ஆகியோரின் துணை வேண்டப்பட்டுள்ளது. தமிழும், வடமொழியும் கலந்த இத்தோடயமங்கலத்துடன் வழுவூர்ப் பாணியில் ஆடுவோர் நிகழ்ச்சியைத் தொடங்கும் வழக்கம் காணப்படுகிறது.

மங்கலச் சொற்களைக் கொண்ட கடவுள் வாழ்த்துப்பாடல் எனப் பொருள்படும் இத்தோடயமங்கலத்துடன் நாட்டிய நிகழ்ச்சிகள் தொடங்கும் வழக்கம் இன்று வெகுவாகக் குறைந்து, விநாயகர் துதியோடு நிகழ்ச்சி தொடங்குவது வழக்கமாகிவிட்டது. இந்த வகையில் கோடீச்வரய்யரின் "வாரண முகவா துணை" (அம்சத்வனி), சரவணபவானந்தரின் "ஞானவிநாயகனே சரணம்..." (கம்பீரநாட்டை), இராமலிங்கசுவாமிகளின் "கலைநிறை கணபதி...." ஆகிய தமிழ்ப் பாடல்கள் குறிப்பிடத்தக்கன.

## அலாரிப்பு

இறைவன், பூமாதேவி, குரு, சபையோர் ஆகியோர்க்கு வணக்கம் செலுத்தியபின், அரங்கில் அடுத்து இடம்பெறுவது நிருத்த வகைக்குரிய அலாரிப்பு ஆகும். நாட்டியத்தில் அடவுகளும், இசையில் அதற்கான சொற்கட்டுகளும் இவ்வுருப்படியில் முதன்மை பெறுகின்றன.

திச்ர அலாரிப்பு, சதுச்ர அலாரிப்பு, ஐவகை நடையும் கூடிய பஞ்சநடை அலாரிப்பு என்ற வகையில் வெவ்வேறு நடைகளில் அலாரிப்பு அமையும். இதன் சொற்கட்டுகள் "சங்கீத சாராம்ருதம்" எனும் நூலைத் தழுவி "தத்தை தையும் தத்தாம் கிடதக..." என்ற வகையில் உருப்படி முழுவதும் அமையும். அலாரிப்பு உருப்படிக்கான இசை மூன்று வகையில் இடம்பெறலாம்.

அ) நட்டுவ ஆசான் தாளத்தைக் கைத்தாளத்தில் தட்டிக்கொண்டு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தா | தெய் | தெய் | // | தத் | தா | கிடதக // |
| தாம் | தித் | தா.. | // | தெய் | தத் | தெய் // |

எனச் சொற்கட்டுகளைத் தத்தகாரத்தில் சொல்லுதல் ஒரு வகையாகும்.

ஆ) பக்க இசைப்பாடகர் சொற்கட்டுகளை இசையுடன் பாடுதல். எடுத்துக்காட்டாக கம்பீரநாட்டையில்,

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| க்ா | ச்ா | ச்ா | // | க்ா | ச்ா | ச்நிநிப // |
| தா | தெய் | தெய் | | தத் | தா | கிடதக |
| சர் | கர் | சர் | // | ச்நிநிப | பா | ச்ா // |
| தாம் | தித் | தா | | தெய் | தத் | தெய் |

என இசையுடன் பாடுவது.

இ) நட்டுவ ஆசான் சொற்கட்டுக் கோவைகளைத் தத்தகாரத்தில் சொல்ல, அதே தாளநடையிலான அருணகிரிநாதர் திருப்புகழ்ப் பாடல் ஒன்றைப் பாடகர் பாடுவது அடுத்த வகையாகும். திருப்புகழிலுள்ள சந்தச் சொற்கட்டுக்கள் ஐந்து கதிகளுக்கும் பொருந்தியிருப்பதால் அவற்றில் சில பாடல்கள் அலாரிப்பு இசைக்குப் பயன்படுகின்றன.

எ-டு "த்கிட தகிட" என்ற திச்ர அளவுடைய அலாரிப்பு

"தனை தனை தனை தனை" என்ற சந்த அமைப்பிலுள்ள திருப்புகழுக்கு இசைந்துள்ளது.

சந்தம் - தனை தனை தனை தனை
பாடல் - தமரு மமரு மனைபு மினிய

## மல்லாரி

நாட்டிய நிகழ்ச்சியில் மல்லாரி எனும் ஒரு நாட்டிய உருப்படி அலாரிப்பிற்கு முதல் ஆடப்பெற்று வருகிறது. மொழிகலைவாது தத்தகாரத்தில் மல்லாரி இசையை கோயில்களில் நாகசுர மேளம் இசைக்க, ஆடல் அரங்குகளில் பக்கப் பாடகரே பாடி வருகின்றனர். கம்பீர நாட்டை இராகத்தில் முதற்காலம். இரண்டாம் காலம் பின் முதற்காலம் என்ற நிலையில் பாட்டிசையோடு நட்டுவனார் தாளம், மிருதங்கம், குழல் ஆகிய அனைத்து இசையும் சேர்ந்திருக்க, நாட்டிய நடிகை நிருத்த வகையில் மல்லாரியை ஆடுவார்.

எ.டு : இராகம் : கம்பீரநாட்டை                    தாளம் : கண்ட சாபு

"கண்ட நடை
தத்தித் தாம் தக கிண தாம்
தகிட தாம்த தீம்த தீம்த
தகத தீம்த ததீங்கிணதொம்
தக ததீங்கிண தொம்
தகதிக ததீங்கிண தொம்"

## புஷ்பாஞ்சலி

தொடக்க காலத்தில் கோயில் வழிபாட்டில் ஆடப்பெற்ற ஒருவகை நடனம் புஷ்பாஞ்சலி ஆகும். தற்காலத்தில் நிகழ்ச்சியின் தொடக்கத்தில் இந்நடனம் ஆடப்படுகிறது. கைகளில் மலர்களை ஏந்தியவாறு அரங்கில் புகுந்து, ஆடல் தெய்வமாகிய நடேசப் பெருமானை மலர்தூவி வணங்கி, நாட்டிய ஆசானையும் பக்க இசையாளரையும் வணங்கிக் கொண்டு ஆடல் மகள் புஞ்பாஞ்சலியை நிகழ்த்துவாள். நிருத்தமும் அபிநயமும் கூடிய இவ் ஆடலின் இசை தனிச்சிறப்புடையது. நாட்டை, கம்பீரநாட்டை, அம்சத்வனி போன்ற இராகங்களில் இந்த உருப்படி அமைகிறது.

"தத்தோடக தாம் தந்தாம்த திந்தீம்த
தத்தோடக தாம் தகுதாம் தெய்"

இவ்வாறு உருப்படி முழுமையும் சொற்கட்டுக்களே இருக்கும். இறுதியில் கடவுள் வணக்கமாக ஒரு பாடல் அவரவர் விருப்பத்திற்கேற்ப அமையும். பெரும்பான்மையான நாட்டிய அரங்குகளில் ஆடப்பெறும் புஷ்பாஞ்சலியில் இசைக்கப்படும் இருபாடல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

அ) நடராசர் துதி – உலகெலாம் உணர்ந்து .....
(சேக்கிழாரின் பெரியபுராணப் பாடல்)
ஆ) விநாயகர் துதி – வாக்குண்டாம் நல்ல.......
(ஔவையார் பாடல்)

## கவுத்துவம்

இது தமிழிலும் வடமொழியிலும் அமைந்த ஒருவகைப் பக்திப் பாடலாகும். கவியோடு கூடிய சொற்கட்டுக்கள் இதில் அமைவதால் கவித்துவம் என்று தொடக்க காலத்தில் கூறப்பட்டு பின்னர் கவுத்துவம், கௌத்துவம் என்று மருவியிருக்கலாம். இது முன்னர் கோயில்களில் இசைப்பதற்கென்றே ஏற்பட்ட ஓர் உருப்படியாகும்.

கவுத்துவங்கள் பொதுவாக ஒரே அமைப்பில் இருக்கும். முதலில் சொற்கட்டும் தொடர்ந்து பாடலும் இறுதியில் சொற்கட்டுமாக அமைந்திருக்கும். இசை அமைப்பு மிக எளிமையாக இருக்கும். இவ்வுருப்படியின் நடை தொடக்கம் முதல் இறுதிவரை ஒரே காலப் பிரமாணத்தில் இருக்கும்.

கோயில் திருவிழாவின்போது திசை கூட்டுதல் எனும் ஒரு சடங்கு நடைபெறுவது வழக்கம். இச்சடங்கின்போது ஒன்பது திசைத் தேவர்களுக்கும் கவுத்துவம் பாடப்படும். இவை ஒன்பதும் நவசந்தி கவுத்துவங்கள் என்று அழைக்கப்படுகின்றன. ஆகம நூல்களின்படி நவசந்தி கவுத்துவங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள தாளங்கள் இன்று வழக்கிலில்லை. கே.பி.கிட்டப்பா, கே.பி.சிவானந்தம் ஆகியோர் ஒன்பது கவுத்துவங்களையும் முறையே திச்ர ஏகம், மிச்ர சாபு, சதுச்ர ஜம்பை, சதுச்ர ஏகம், கண்ட ஏகம், சதுச்ர ஏகம் ஆகிய தாளங்களில் அமைத்து அவற்றை சுரதாளக் குறிப்புகளுடன் எழுதி நூலாக வெளியிட்டுள்ளனர்.

இவற்றைவிட பஞ்சமூர்த்திகளாகிய விநாயகர், முருகன், சம்பந்தர், சண்டிகேசுவரர், நடராசர் ஆகியோர் மீது பாடப்பெற்ற பஞ்சமூர்த்தி கவுத்துவங்களும், தெய்வங்களை முன்னிலைப்படுத்தும் விநாயகர் கவுத்துவம், நடராசர் கவுத்துவம், காளி கவுத்துவம் ஆகியனவும் அரங்குகளில் தற்காலத்தில் நாட்டியமாக ஆடப்படுகின்றன. நிகழ்ச்சியில் அலாரிப்பு அல்லது புஷ்பாஞ்சலி அல்லது மல்லாரிக்குப் பின் கவுத்துவம் ஆடப்படுகிறது. இவ் உருப்படி பெரும்பாலும் கன இராகங்களிலும் மங்களகரமான இராகங்களிலும் அமைந்துள்ளன.

## ஜதிஸ்வரம்

ஜதிக் கோவைகளாலும் சுரக்கோவைகளாலும் அமையும் இவ்உருப்படி நாட்டியத்திற்கென்றே தோன்றிய இசை வடிவங்களில் ஒன்றாகும். ஜதிசுவரங்கள் பெரும்பாலும் கமாசு, கல்யாணி, சாவேரி, தோடி, அடாணா, சரசுவதி, சங்கராபரணம் போன்ற இராகங்களிலும், மிச்ரசாபு, ரூபகம், ஆதி போன்ற தாளங்களிலும் அமைந்திருக்கும். இராகமாலிகை ஜதிசுவரங்களும் உள்ளன.

## சப்தம்

சொற்கட்டும் பாட்டும் சேர்ந்த ஓர் இசை வகை சப்தமாகும். சொற்கட்டுகள் வெறும் தத்தகாரத்தில் சொல்லாமல், பாடல் அமைந்துள்ள இராக தாளத்தில் இசைக்கப்படும். இவ் உருப்படி ஆதி, ரூபகம், அட, ஜம்பை, திரிபுடை, துருவம், மிச்ரம் எனப் பல்வேறு தாளங்களில் அமைந்திருந்தாலும், தற்கால அரங்குகளில் மிச்ரசாபு தாளத்தில் அமைந்த சப்தங்களே பெரு வழக்கிலுள்ளன. பொதுவாக சப்தங்களை காம்போதி இராகத்தில் பாடப்பெறினும், இராக மாலிகை சப்தங்களும் உள்ளன. கி.பி.18ம் நூற்றாண்டில் சப்தம் எனும் இசை வகையைப் பிரபல்யப்படுத்தியவர் தஞ்சையில் வாழ்ந்த பரதம் காசிநாதகவி என்பவராவர். இவரைத் தொடர்ந்து பரதம் நாராயண கவி, தஞ்சை நால்வர் பல சப்தங்களை ஆக்கித் தந்துள்ளனர்.

மிச்ரசாபு தாளத்திலும், காம்போதி இராகத்திலும் அமைந்த சப்தம் ஒன்றின் தொடக்க சொற்கட்டுக்கோவை பின்வருமாறு :

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ததச் | சாநிப | // | ததச் | ச்ரநிப | // |
| ததண | தந்தண | // | ததிமி | திந்திமி | // |
| ததா | ச்ச்நிப | // | பதச் | ச்நிபத | // |
| தத்தோம் | தண்கிண | // | ததிமி | திமிகிட | // |
| சா : | மக | // | பாத | ச்ா : | // |
| தா .... | தெய் | | தத்த | தா | |

மன்னர்கள் பேரில் அமைந்த சப்தங்கள் வழக்கிலில்லை. தெய்வங்கள் பற்றிய சப்தங்களே வழக்கிலுள்ளன. திருவாரூர் வீதிவிடங்கரைப் பற்றிய ஒரு சப்தம் தமிழில் உள்ளது.

## பதவர்ணம்

இருவகை வர்ணங்களில் நாட்டியத்திற்கென ஏற்பட்டது பதவர்ணம். இது விளம்பகாலத்தில் பாடப்படுவதாலும், உருப்படி முழுவதிலும் சாகித்தியம் அமைவதாலும் தானவர்ணத்திலிருந்து வேறுபடுகிறது. இது ஆடல்வர்ணம், பதஜதி, சௌக்கவர்ணம் எனப் பல பெயர்களைக் கொண்டு விளங்குகிறது.

பதவர்ணத்தின் ஒவ்வொர் பாடல் வரி முடிவிலும் சொற்கட்டுக் கோவைகள் நாட்டிய ஆசான் தகைமையையும், நடனம் ஆடுபவரின் திறமையையும் வெளிக்காட்டும் வகையில் அமையும்.

பதவர்ணத்தின் பல்லவி, அநுபல்லவிகுரிய பாடற்பகுதி பாடியபின் முக்தாயிசுவரத்தின் சுரங்களும் அதன் பாடலும் பாடப்படும். சரணத்தின் தொடக்கம் எத்துக்கடைப் பல்லவி என்றும் மீதிப்பகுதி எத்துக்கடை சரணங்கள் என்றும் சொல்லப்படும். ஒவ்வொரு சரணத்தின் சுரக்கோவைகளும் அதன் அமைப்பிலான பாடலும் பாடி எத்துக்கடைப் பல்லவியை எடுத்துப்பாடுவது இதன் பாடுமுறையாகும்.

பதவர்ணத்தின் பாடுபொருள் அகப்பொருளை மையமாகக் கொண்டிருக்கும். தஞ்சையில் நால்வர் தெய்வத்தை மட்டுமன்றி, மன்னர்களையும், பாட்டுடைத் தலைவராக வைத்துப் பல பதவர்ணங்ககளை இயற்றியுள்ளனர். பதவர்ணங்கள் பரமாத்மா, ஜீவாத்மா தொடர்பை உணர்த்தும் தெய்வப் பாடல்களாக கருதப்படுகின்றன.

எ.டு.

"சுவாமி நானுந்தன் அடிமை என்று உலகமெலாம் அறியுமே
தாமதம் செய்யாது வந்தருள் மாதோர் பங்கா பூதேசா"

இதில் இறைவனை முன்னிலைப்படுத்தி தன்னை ஆட்கொள்ளும்படி தலைவி வேண்டும் பாங்கினைப் பாபநாசம் சிவனார் இயற்றிய இப்பதவர்ணத்தில் காணலாம். பாடலில் ஒவ்வொரு அடியும் அபிநயத்தால் விரிவாக்கம் (சஞ்சாரிபாவம்) செய்து ஆடும் வகையில் அமைந்திருப்பது இதன் தனிச்சிறப்பு.